கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் போற்றுதலுக்குரிய திராவிட மாடல் அரசின் செயல்பாடுகளால் ஈர்க்கப்பட்டு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் மாற்றுக்கட்சிகளில் பல்வேறு பொறுப்புகளில் இருந்த பி.மகுடன், பி. கணேஷ்குமார் ,என். ராஜேஷ், எஸ். பாலாஜி மற்றும் 50 பேர் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர். உடன் கொளத்தூர் மேற்கு பகுதி செயலாளர் எ. நாகராஜன் எம். சி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி. மகேஷ் குமார் தலைமை பொதுக்குழு உறுப்பினர் சரிதா மகேஷ் குமார் .எம்.சி., மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

வெள்ளக்கோவில் நகராட்சி திருப்பூர் மாவட்டம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமராவதி ஆற்றில் இருந்து குடிநீர் விநியோக மேம்பாடு பணிக்காக மதிப்பீடு ரூ.13.70கோடி திட்டப்பணியை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் , திருப்பூர் மாநகராட்சி மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன். கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் பொதுமக்களும், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்ட முரசொலி நாளிதழ் செய்தியாளர்

இரா.அண்ணாதுரை இல்ல திருமண வரவேற்பு விழா!

அமைச்சர் ஆவடி சாமு.நாசர் மணமக்களை வாழ்த்துகிறார்!

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ - வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் - வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ , ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ - டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ - உள்ளிட்ட கழக முன்னணியர் பங்கேற்பு!

திருவள்ளூர் செப் 02:-

திருவள்ளூர் மாவட்டம் முரசொலி நாளிதழ் செய்தியாளர் இரா. அண்ணாதுரை -ஜீவா இல்ல திருமண வரவேற்பு விழா 04-09-2025 அன்று மாலை 6 மணியளவில் திருவள்ளூர் ஜே.என். சாலை ஆயில் மில் அருகில் உள்ள ஐ.ஆர். என். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமை தாங்கி மணமக்கள் அ.விக்னேஷ், இர.கீதா ஆகியோரை வாழ்த்துகிறார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி , கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திருத்தணி எம். பூபதி, கே.ஜெ.ரமேஷ் , இ.ஏ.சிவாஜி, எல்லாபுரம் பி. ஜெ.மூர்த்தி, மாநில நிர்வாகிகள் பிரபுகஜேந்திரன், சி.ஜெரால்டு, ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், சி.எச்.சேகர், வெ.அன்பு வாணன், பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ராபர்ட் ராஜ்துரை, மாவட்ட அவைத்தலைவர்கள் கே.திராவிட பக்தன், மா.ராஜி, மு.பகலவன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம்.எல். ரவி, மாவட்டக் கழக பொருளாளர்கள் பா.நரேஷ்குமார், மிதுன் சக்கரவர்த்தி, எஸ்.ரமேஷ், ஆவடி மாநகர மேயர் உதயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம் ராஜேஸ்வரி ரவீந்திரநாத், த.எத்திராஜ், ஜி.ராஜேந்திரன், ஜி.விமல்வர்

ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர் , எஸ்.சங்கர், கே.சுப்பிரமணியம், பி.வெங்கடாஜலபதி, ஏ.விராம்மூர்த்தி, பா.சே.குணசேகரன், டாக்டர் பரிமளம், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் சி.சு.ரவிச்சந்திரன், சண்.பிரகாஷ், கூளூர் எம்.ராஜேந்திரன், டி.கிறிஸ்டி, க.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், வி.வினோத் குமார், பா.ஆர்த்தி ரவி, என்.கிருஷ்ணன், ஜி.ரவீந்திரா, சி.என்.சண்முகம், பெ.பழனி, சி.ஜெ.சீனிவாசன், பிடி.சந்திரன், கே.ராஜேந்திரன், பா.சம்பத், மா.ராகு, ஏ.எல்.விஜயகுமார், டி.ஆர்.கே.பாபு, சி.ஜெ.செந்தில் குமார், டி.தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், ப.ச.கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.இரவி, என்.இ.கே. மூர்த்தி, முரளி கிருஷ்ணன், தங்கம் முரளி, பேபிசேகர், பொன்.விஜயன், ஜி.நாராயண பிரசாத், தி.வே. முனுசாமி, டி.கே.சந்திரசேகர், கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த் குமார், ஆ.சக்திவேலு, ஜான் பொன்னுசாமி, மு.மணிபாலன், ந.பரிமளம், ஆ.ராஜா, கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், மு.முரளிதரன், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், வே.ஆனந்த் குமார், ஆர்.டி.இ.உதயசூரியன் , பி.முத்து, க.சு.தமிழ் உதயன், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், ம.கிரண், கே. வி.லோகேஷ், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு கிளைக் கழகச் செயலாளர்கள் இந்நாள் முன்னாள் கழக மூத்த முன்னோடிகள், அரசுத்துறை சார்ந்த அதிகாரிகள் ஊழியர்கள் பத்திரிக்கை துறை சார்ந்த நண்பர்கள் புகைப்பட கலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள் முடிவில் அ.மகேஷ், அ. தீனா நன்றி கூறுகிறார்கள்.

பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப்பணி செய்து

2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கு மேல் வெற்றியை உறுதி செய்ய உழைப்போம்!

கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், செப். 2 -

பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப்பணி செய்து வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கு மேல் வெற்றியை உறுதி செய்ய உழைப்போம் என்று கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகி கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி கழக பொறியாளர் அணி மாநில மற்றும் மாவட்ட நிர்வாகி கள் கலந்தாய்வுக் கூட்டம் 31.08.2025 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணியளவில் கோவை மாவட்டம், அன்னூரில் கோவை to சத்தி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சாமுத்திரிகா திருமண மண்டபத்தில் பொறியாளர் அணி மாநிலச் செயலாளர், கழக செய்தி தொடர்பாளர் எஸ். கே.பி கருணா தலைமையில் மாநிலத் தலைவர் துரை.கி.சரவணன் முன்னிலையில் மாநில துணைச் செயலாளர் எஸ். ஏ.நந்தகுமார் வரவேற்புரையில் நடைபெற்றது. மேற்கு மண்டல பொறுப்பாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வாழ்த்துரை வழங்கினர். இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி சிவா ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இதில் பொறியாளர் அணி மாநில இணை மற்றும் துணைச் செயலாளர்கள் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், பொள்ளாச்சி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், வே.உமா காந்த், இரா.நரேந்திரன், முனைவர் சி.பிரதீப், இரா.ப.பரமே சுகுமார், ஆர்.வி.எல். இரவிச்சந்திரன், கலை கார்த்திகேயன், வெற்றி ஞானசேக ரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்ட னர். இறுதியில் கோவை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் நா.பாபு நன்றியுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் 1 : தமிழகத்தில் கல்வித்துறை, சுகாதாரத்துறை, தொழில் துறை மட்டுமில்லாமல் அனைத்து துறைகளையும் முதன்மை மாநிலமாக மாற்றி அமைத்துக் கொண்டிருக்கும் குறிப்பாக பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன் மாநிலமாக தமிழகத்தை வெற்றி பாதையில் நடத்திக் கொண்டிருக்கும் நமது திராவிட மாடல் அரசின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழக மக்கள் சார்பில் இக்கூட்டத்தின் மூலம் நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தீர்மானம் 2 : மாநிலப் பொறியாளர் அணியின் பொறுப்பாளராக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்களை நியமித்தமைக்காக கழகத் தலைவர் முதலமைச்சருக்கு இந்தக் கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறது.

தீர்மானம் 3 : கழக தலைமையால் பொறியாளர் அணியில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக பொறுப்பபிற்கு புதிதாக நியமிக்கப்பட்டு உள்ளவர்களுக்கும் மற்றும் வரும் நாட்களில் புதிதாக நியமிக்கப்பட உள்ள நிர்வாகிகள் அனைவருக்கும் இக்கூட்டத்தின் மூலம் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தீர்மானம் 4 : கழக தலைவர் அவர்களது அறிவுறுத்தலின்படி செப்டம்பர் 17 முப்பெரும் விழாவை மாநிலம் முழுவதும் உள்ள பொறியாளர் அணி நிர்வாகிகள் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் நலத் திட்ட நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என்றும் வருகின்ற 17.09.2025 அன்று கரூரில் நடைபெற இருக்கும் மாபெரும் விழாவில் நமது பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் கலந்து கொள்வோம் என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது.

தீர்மானம் 5 : உலகத்திற்கே எடுத்துக்காட்டாக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசால் செயல்படுத்தி வரும் மாபெரும் திட்டங்களான புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், நான் புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களை தொடர்ந்து தற்பொழுது இந்தியாவிலேயே முதல் முதலாக மாநில கல்வி கொள்கையை உருவாக்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறை வேற்றப் படுகிறது.

தீர்மானம் 6 : வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிக்கும் மேல் வெற்றி பெற வேண்டும் என்று கூளுரைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதல்வர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களது கூளுரையை நிறைவேற்று ம் வகையில், நமது பொறியாளர் அணியில் உள்ள அனைவரும் முழு வீச்சில் களப்பணி செய்து 200 தொகுதிக்கு மேல் வெற்றியை உறுதி செய்ய உழைப்போம் என்கின்ற முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

சென்னை வால்டாக்ஸ் சாலையில் கட்டப்படவுள்ள

குளிரூட்டப்பட்ட புதிய பேருந்து நிறுத்தம் அமைப்பதற்கான பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, செப். 2 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (01.09.2025) துறைமுகம் சட்டமன்ற தொகுதி, வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்படவுள்ள குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்திற்கான (AC Bus Shelter) பணியினை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி. கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பி.கே.சேகர்பாபு வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளான வால்டாக்ஸ் சாலை, ஒத்தவாடை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் கட்டுமான பணிகளையும், வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு நிலையம், 844 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டுத் திடல், சமூக நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் என "ஒருங்கிணைந்த வளாகம்" கட்டுமான பணிகளையும் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகளையும் மேயர் திருமதி.ஆர்.பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி. ஆர். பிரியா, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் ராகவன், பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், தலைமை பொறியாளர் .மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், உள்ளாட்சித் பிரதிநிதிகள் திரு.எஸ். முரளி, அபாரன்ஜி, ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், பரிமளம், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட

பொறியாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

இரா.சக்கரவர்த்தி அறிக்கை!

சென்னை, செப். 2-

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலாப்பூர் மேற்கு - கிழக்கு மற்றும் தியாகராய நகர் மேற்கு கிழக்கு பொறியாளர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு தலைமையில், ஜே.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதி கழக செயலாளர்கள் நந்தனம் கி. மதி எம்.சி., எஸ் முரளி, கே ஏழுமலை எம்.சி., ஆகியோர் முன்னிலை யில் பொறியாளர் அணி சென்னை மண்டல பொறுப்பாளர் மற்றும் மாநில துணை செயலாளர் பொறியாளர் அணி இரா. நரேந்திரன் ஆகியோர் வழிகாட்டுதலினின் இந்த ஆலோசனை கூட்டம் நாளை (03.09.2025- புதன் கிழமை) மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாலை 3 மணியளவில் நடைபெறுகிறது.

ஆகையால் பொறியாளார் அணி மாவட்ட தலைவர் மாவட்ட துணை தலைவர் துணை அமைப்பாளர்களும் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை தென்மேற்கு மாவட்ட பொறியாளர் அணி - மாவட்ட அமைப்பாளர் இரா.சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் நகர மாவட்ட கழக முன்னாள் பிரதிநிதியும், நகர்மன்ற முன்னாள் உறுப்பினருமான பா. நந்தகுமார் மற்றும் பூண்டி மேற்கு ஒன்றியம் எறையூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ரங்கநாதன் ஆகியோரது இல்லத் திருமணங்கள் மற்றும் திருவள்ளூர் நகரம் 6 – வது வார்டு இளைஞரணி தம்பி ஹேம்குமார் திருமண நிகழ்ச்சிகளில் வி.ஜி. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வில் நகராட்சி தலைவர் உதயமலர் பாண்டியன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி, பொன். பாண்டியன், ஆ.கமலகண்ணன், நகர் மன்ற உறுப்பினர்கள் டி.கே.பாபு, கு.பிரபாகரன், பிரவீன்குமார், இளங்கோவன், இ.ஹேமநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.